# பக்தி இலக்கியங்களில் இசைக்கருவிகள் பற்றிய குறிப்புக்கள்

# References to Musical Instruments in Bhakti Literature

*முனைவர் நாகரட்ணம் மாதவன்*
விரிவுரையாளர், இசைத்துறை
சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

**Dr. Nagaratnam Madhavan**
*Lecturer, Department of Music*
*Swami Vipulananda Institute of Aesthetic Studies*
*Eastern University, Sri Lanka*

## ஆய்வுச் சுருக்கம்

*பக்தி இலக்கியங்கள் பற்றி நோக்கும் போது அவை எவை எல்லாம் பக்தி இலக்கியங்கள் என்பதும் எக்காலத்தைச் சேர்ந்த பக்தி நூல்கள் என்பதும் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவை என்பதும் மிகவும் முக்கியமாக நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இங்கு தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்ய பிரபந்தம் ஆகிய சைவ, வைணவ சமயங்களைச் சேர்ந்த பாடல்களில் குறிப்பிடப்பட்ட இசைக் கருவிகள் பற்றி சுருக்கமாக ஆராய்வதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.*

## Abstract

*When we look at Bhakti literature, it is very important to know which are the Bhakti literatures, the period of bhakti literature and the religion to which they belong. This study is a brief study of the musical instruments mentioned in the songs of Saiva and Vaishnava religions such as Thevaram, Thiruvasagam and Naalayira Divya Prabandham.*

***Keywords:***

*Bhakti Literature, Naalayira Divya Prabandham, Thevaram, Thiruvasagam, Saiva and Vaishnava Religions*

**Citation**

Madhavan, N. “References to Musical Instruments in Bhakti Literature.” *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 4, 2024, pp. 21–24.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20095171*

**முன்னுரை**

*பெரிய புராணம் குழலைப் பற்றி ஆனாயநாயனார் புராணத்தில் விளக்குகின்றது. இது கோவலர் இசைப்பது வேய்ங்குழலாக அமைந்து இசை நூல் விதிப்படி துளையிடப்பட்டது. அதில் இசையை எவ்வாறு எழுப்புவது என்பதை சேக்கிழார் மிக விரிவாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார். ஆனாயநாயனார் திருவைந்தெழுத்தை புல்லாங்குழலில் வைத்துப் பாடித் திருத்தொண்டு புரிகின்றார். இதை*

***"மேவு துளைக்கரு விக்குழல்***
***வாசனை மேல்கொண்டார்" (ஆனாய.புரா.பா.12:4)***

*என்று கூறுவதைக் காணலாம். மேலும் சைவ மந்திரமான நமசிவாய என்பதை எண்ணி இசை விதி முறை வழுவாமல் இசையமுது அளித்துக் காட்டுகிறார்.*

***"ஏழு விரல் இடையிட்ட இன்னிசைவங் கியமெடுத்துத்***
***தாழுமலர் வரிவண்டு தாதுபிடிப் பனபோலச்***
***சூழுமுரன் றெழுநின்ற தூயபெருந் தனித்துளையில்***
***வாழியநம் தோன்றலார் மணியதரம் வைத்தூத்" (ஆனாண.புரா.பா:23)***

*இப்பாடலில் வங்கியம் குறிப்பிடப்பட்டுள்ளது. வங்கியம் என்பது இன்றைய நாதஸ்வரம் என்பது கருத்தாகும்.*

*திருநீலகண்ட யாழ்ப்பாணர் புராணத்தில் சேக்கிழார் யாழ் பற்றிய குறிப்பைத் தருகிறார்.*

***"அந்தரத் தெழுந்த ஓசை***
***அன்பினில் பாணர் பாடும்***
***சந்தயாழ் தரையிற் சீதம்***
***தாக்கில்வீக் கழியும் என்று***
***சுந்தரப் பலகை முன்னீர்***
***இடுமெனத் தொண்டர் இட்டார்***
***செந்தமிழ் பாணனாரும்***
***திருவருள் பெற்றுச் சேர்ந்தார்" (திருநீலகண்ட யாழ்ப்பாணர் பா:6)***

*யாழ் தரையில் பட்டால் குளிர் தாக்கி இசை குன்றி விடும் என்ற குறிப்பை இதனால் அறியலாம். யாழ்ப்பாணர் கையிலிருந்த யாழைச் சந்த யாழ் என்று குறிப்பிடுகின்றார். சந்தப் பாடல்களை இசைப்பதனால் இவ்வாறு கூறப்பட்டுள்ளதா என்றும் நோக்கலாம்.*

*யாழிசையுடன் மிடற்றிசை ஒன்ற வேண்டும். திருநீல கண்டத்துப் பெரும்பாணர் மதங்க சூளாமணியுடன் யாழிசைத்துப் பாடுவதை சேக்கிழார் பின்வருமாறு விளக்குகின்றார்.*

***"யாழிலெழும் ஓசையுடன் இருவர்மிடற் றிசையொன்றி" (திருஞா.புரா.பா:136.1)***

*மேலும் பாணர் முறையாக யாழிசைப்பதை*

***"யாழின்முறை மையினிட்டே எவ்வுயிரும் மகிழ்வித்தார்***
***ஏழிசையும் பணிகொண்ட நீலகண்ட யாழ்ப்பாணர்" (திருஞா.புரா.பா:139.3-4)***

*என்று குறிப்பிடுகின்றார். எல்லா உயிர்களும் பாணரின் யாழிசை கேட்டுப் பணிகின்றன. ஏழு இசைகளும் அவருக்கு இசைகின்றன. ஏழிசை பரவுகிறது. யாழிசையின் சிறப்பு எத்தகையதென்பதை இந்தப் பாடல் நன்கு விளக்கியுள்ளது.*

*யாழின் வகைகளையும் சேக்கிழார் ஒரு பாடலில் குறிப்பிடுகின்றார்.*

***"ஏதமில் விபஞ்சி வீணை***
***யாழொலி ஒருபால் ஏத்தும்***

***நாதமங் கலங்கள் கீத***

***நயப்பொலி ஒருபாலாக''*** *(திருஞா.புரா.பா:1200.1-2)*

*இதில் விபஞ்சி, வீணை, யாழ் ஆகிய மூன்றும் தனித்தனிக் கருவிகள் என்பது குறிப்பாகின்றது. இன்னொரு பாடலில்*

***''நேர்வைத்த வீணைக்கும் யாழுக்கும் நிலைவகையால்***

***சேர்வுற்ற தந்திரியும்''*** *(திருநாளைப்.புரா:14.1-2)*

*என்று கூறுவதிலும் வீணையும் யாழும் வேறு வேறாகக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம்.*

*பெரிய புராணத்தில் பண்ணிசைக் கருவிகளாக யாழ், வீணை, கின்னரம், விபஞ்சி, குழல், வயிர், கொம்பு, சங்கு, தாரை, காளம் ஆகியவை குற்ப்பிடப்படுகின்றன. குறிப்பாக இறைவன் தாரை, சின்னம், காளம் ஆகியவற்றையும் பொற்றாளத்தையும் திருஞானசம்பந்தருக்கு இசைப் பரிசாக வழங்கியதை இங்கு நோக்கலாம்.*

*தாள இசைக்கருவிகளாக முரசு, துந்துபி, முழவு, தண்ணுமை, படகம், ஆகுளி, பேரிகை, பம்பை, துடி, திமிலை, தட்டி, தொண்டகம் ஆகியவை பெரிய புராணத்தில் இடம்பெற்றுள்ளன. திருவிளையாடல் புராணமும் இசைக்கருவிகள் பற்றிய பல செய்திகளைத் தருகின்றது. இசை வாது வென்ற படலத்தின் முதல் பாடலிலும் யாழ் பற்றிய செய்தி உள்ளது.*

***''மாடகஞ் செறியும் யாழ்வழி பாடி***

***வாது வென்றவர லாரும் இசைப்பாம்''*** ***(இசைவாது.பா:1-4)***

*இங்கு மாடகம் செறிந்துள்ள யாழை இசைத்து வாது செய்வது குறிப்பாகின்றது. யாழிசைப்பதைக் காண மக்கள் இரு பக்கமும் மொய்த்து மோதுகின்றனர். யாழிசைக்கும் முறை சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, பெருங்கதை ஆகிய காப்பியங்களில் விளக்கப்பட்டுள்ளது போன்று பெரியபுராணத்திலும் விளக்கப்பட்டுள்ளது. மேலும் இசைவாதில் வீணை இசைக்கும் முறையும் பகிரப்பட்டுள்ளது.*

***''வீணை வாங்கினண் மாடகம் முறுக்கினன் விசித்து***

***வாண ரம்பெறிந் திருசெவி மடுத்தனர் இயக்கா***

***நாண மெல்விரல் நடைவழி நாவிளை அமுதம்***

***பாணர் கோமன் விறலியும் பலர்செவி நிறைத்தாள்''*** ***(இசைவாது:பா.16)***

*வீணை இசைக்கும் முறையும் அதனை இசைத்து வழங்கும் போக்கும் இதில் விளக்கப்படுகின்றது. யாழைப்போன்ற உறுப்புக்களை வீணையும் கொண்டது என்பதை இப்பாடலால் அறியலாம். மேலும் மெல்விரல் தடவி இசை எழுப்புவதாகவும் கூறப்பட்டுள்ளது. வீணை இனியது, மழலை இன்பம் தருவது, ஏழிசைகளை இசைக்க வல்லது, அதனை இடத்துத் தழுவி இசைக்கவேண்டும், சுருதி கூட்டி வாசிக்கவேண்டும். இங்கு சுருதி என்ற சொல் 16ம் நூற்றாண்டிலேயே தமிழின் இசையில் புகுந்து விட்டதென்பது குறிப்பாகின்றது. இது பின்வருமாறு விறகு விற்றப் படலத்தில் அமைகின்றது.*

***''ஏழிசை மழலை வீணை***

***இடந்தழீஇச் சுருதி கூட்டி***

***வாழியின் இசைத்தேன் மன்னன்***

***அஞ்செவி வழியப் பெய்தான்''*** ***(விறகுவிற்றப்:3.3-4)***

*இதே படலத்தில் யாழ் பற்றிய செய்தியும் சங்ககால முறையில் இடம்பெற்றுள்ளது.*

***''பழைய தோர்பொல்லம் பொத்திய பத்தர்யாழ்க் கோறோள்''*** ***(விறகுவிற்றப்.பா:13.1)***

*பொல்லம் பொத்திய பத்தரயுடைய யாழ் என்பதை இங்கு நோக்கலாம். யாழ் தோலால் பொதியப்பட்டுள்ளதைப் பின்வருமாறு அறியலாம்.*

**“பருந்தொடு நிழல்போக் கென்ன**
**யாணரம் பிசையின் செல்ல விசைந்த இன்னிசை”** **(விறகுவிற்றப்.பா:36.1-2)**

*பருந்தும் அதன் நிழலும் போல் யாழிசையும் பாட்டிசையும் ஏறும் போதும் இறங்கும் போதும் பொருந்தி இசைதல் வேண்டும். இதே குறிப்பைப் பெருங்கதையிலும் சீவகசிந்தாமணியிலும் காணலாம். தமிழர் இசைமரபு வழியாக வளர்ந்து வருவதற்கு இது தக்கதொரு சான்றாக அமையும்.*

*கஞ்சநாதம் என்று கூறுவது கஞ்சக்கருவிகளைக் குறிக்கும். இது தவிர முழவொலி, வலம்புரி முரலும் ஓசை, வேரல்(புல்லாங்குழல்) இசைப்பது ஆகியவை கூறப்பட்டுள்ளன. பல கருவிகளின செய்திகள் ஆங்காங்கே திருவிளையாடல் புராணத்தில் காணப்பட்டிருக்கின்றன. முக்கியமாக யாழ், வீணை இங்கு சிறப்பிடம் பெற்றுள்ளதைக் காண முடிகின்றது.*

*கந்தபுராணம் முருகனின் திருவருளை விளக்குவது. தீயதை வென்று நல்லதை நிலைநாட்டும் வரலாறாகும். ஆகையினால் போர்ச் செய்திகளே இங்கு மிகுந்துள்ளன. அதிலுள்ள தக்க காண்டத்தில் கயமுகன் உற்பத்திப் படலம் சில கருவிகளின் குறிப்பைத் தருகின்றது.*

**“துடியொடு சல்லடி தோமால் தண்ணுமை**
**கடிபடு கரடிகை கணையம் சல்லிகை**
**இடியுறழ் பேரிகை இரலை காகளம்**
**குடமுழா வியம்பினர் கோடி சாரதர்”** **(தக்ககாண்டம்:14.214)**

*என்ற பாடலில் போர்க்களத்தில் ஒலிக்கப்படும் கருவிகள் அடுக்கிக் கூறப்பட்டுள்ளன. துடி, சல்லடி, தேமால், தண்ணுமை, கரடிகை, கணையம், சல்லிகை, பேரிகை, இரலை, காகளம், குடமுழா ஆகிய 11கருவிகளின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.*

**முடிவுரை**

*பக்தி இலக்கியங்களில் அக்காலப் புராண நூல்கள் இறைபற்றுடன் இணைந்து இசையின் பெருமை, இசை எழுப்பும முறை, இசைக்கருவிகள் ஆகியவற்றைத் தெளிவாக எடுத்து விளக்கியுள்ளன. இறைவனை நினைந்து உருகும் நிலையில் இசையும் இசைக் கருவிகளும் அவர்களுக்கு நன்கு உதவியுள்ளது. பாடி, ஆடி இசைக்கருவிகளை மீட்டி இறை அருளை அதிகப்படுத்தி இறை இன்பத்தில் மூழ்கியுள்ளனர். இங்கு இறையுணர்வில் ஈடுபட்ட அடியவர்களுக்கு இசை, இசைக்கருவிகள் எவ்வாறு துணை புரிந்துள்ளது என்பதை இவ்வாய்வினூடாக அறியமுடிகின்றது.*

**உசாத்துணை நூல்கள்**

1. ஏ.என்.பெருமாள் - தமிழர் இசை.
2. சே.வைத்தியலிங்கன் - சேக்கழாரும் நுண்கலைகளும் - பெரியபுராணச் சொற்பொழிவுகள் கழக வெளியீடு - சென்னை.

## References

1. A.N. Perumal, Tamil Music
2. S. Vaithilingan, Sekkilaarum Nunkalaigalum, Periyapurana Sorpozhivugal, Kazhagam Publication, Chennai